# மெட்ரோ ரயிலில் வேலை போலி விளம்பரங்கள் உலா

சென்னை, ஜூன் 25–
மெட்ரோ ரயிலில் வேலை வாய்ப்பு என, சமூக வலைதளங்களில், பரவும் போலி விளம்பரங்களுக்கு மெட்ரோ ரயில் நிர்வாகம் பொறுப்பல்ல என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு என, சமூக வலைதளங்கள் மற்றும் உள்ளூர் டிவி சேனல்களில், தவறான செய்திகள் பரவி வருகின்றன. இதை உண்மை என நம்பி ஏமாந்தோர், மெட்ரோ ரயில் நிர்வாகத்தில் புகார் கொடுத்தனர்.

போலி விளம்பரதாரர்களை பிடிக்க, மெட்ரோ ரயில் நிறுவனம், போலீசில் புகார் கொடுத்துள்ளது.

வேலை வாய்ப்பு விளம்பரங்கள், மெட்ரோ ரயில் அங்கீகார இணையதளமான, https://chennaimetrorail.org மற்றும் பிரபல நாளிதழ்களில், அவ்வப்போது வெளியிடப்படுகிறது.

மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பெயரில் தவறான வகையில், சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளூர் டிவி சேனல்களில் வெளியிடப்படும் தவறான தகவல்களை, பொதுமக்கள் நம்ப வேண்டாம்.

தவறான செய்திகளால் ஏற்படும், தனி நபர் இழப்புகளுக்கு, மெட்ரோ ரயில் நிர்வாகம் பொறுப்பு அல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.